ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2224/20 - 2021 අප්‍රේල් මස 21 වැනි බදාදා - 2021.04.21
*2224/20 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**6 ஆவது திருத்தம்**

இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இல. 1783/37 மற்றும் 2012, நவெம்பர் 09 ஆம் திகதிய, இல. 1816/32 மற்றும் 2013, யூன் 28 ஆந் திகதிய, இல. 1992/77 மற்றும் 2016, நவெம்பர் 11 ஆந் திகதிய, இல. 2137/26 மற்றும் 2019, ஓகத்து 20 ஆந் திகதிய மற்றும் இல. 2196/42 மற்றும் 2020, ஒற்றோபர் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தம் செய்யப்பட்ட இல. 1670/32 மற்றும் 2010, செத்தெம்பர் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம்.ஏ.பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2021, மாச்சு 16.

7.2.2.4 இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் தனது பதவியின் வகிபாகம் மற்றும் கடமைப் பொறுப்புக்களை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் தேவையான போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.2.2.5 வேறு :

தொடர் இல. (III) நீக்கப்படுகின்றது. ஏனைய விடயங்கள் அவ்வாறே செயல்வலுப்பெறும்.

7.2.4.1 எழுத்துமூலப் பரீட்சை

திறந்த பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பதற்கான ஏற்புடைய எழுத்துமூலப் பரீட்சை இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். அந்தப் பரீட்சை தொடர்பான விடயங்கள் 'அ' பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

7.3.2.5 வேறு :

III. பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

7.4 திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு : ஏற்புடையதன்று

7.4.1 முதல் 7.4.4 வரையிலான பகுதிகள் முழுமையாக நீக்கப்படுகின்றன.

10. தரங்களுக்கான பதவி உயர்வு

10.1 தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு

10.1.1.1 பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகள்

(v) பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.2 தரம் II இலிருந்து தரம் I க்கு பதவி உயர்வு

10.2.1.1 பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகள்

(iii) பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

தற்போதுள்ள "அ" பின்னிணைப்புக்குப் பகரமாக இந்த "அ" பின்னிணைப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

"அ" பின்னிணைப்பு

**திறந்த பிரிவின் கீழ் இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் (III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பாட விதானம்**

**01. பரீட்சைத் திட்டம் மற்றும் பாட விதானம் :**

அரசாங்க நிறைவேற்றுநர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை இதற்கு ஏற்புடையதாகும். இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வருடாந்தம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் போட்டிப் பரீட்சையின் முதலாம் பகுதியின் (பொதுப் பகுதி) ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% இற்கு மேல் மற்றும் மொத்தப் புள்ளிகள் 100 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் மாத்திரம் மேற்படி பரீட்சையின் இரண்டாவது பகுதிக்கு அழைக்கப்படுவர்.

(அ) அரசாங்க நிறைவேற்றுநர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சையின் முதலாம் பகுதி (பொதுப் பகுதி)

(I) சாராம்சம்

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 1 ½ மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். |
| 2. கிரகித்தல் | 02 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். |

(II) பாட விதானம்

| *நுண்ணறிவுப் பரீட்சை* |
|---|
| பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல், பிரதியிடல், பொருட்கோடல், தொடர்பு காணல், பெயர்ப்பு, பிரச்சினைகளைத் தீர்க்கும் இயலுமை, காரண காரிய தொடர்புகளை புரிந்துகொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் ஆலோசனைகளை பின்பற்றுதல் முதலிய இயலுமைகளை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. |
| *கிரகித்தல்* |
| பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களை புரிந்து கொள்ளும் இயலுமை, தொடர்பாடல் திறன், சாரம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் ஆக்கத்திறன் ஆகிய திறன்களை அளவிட வடிவமைக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது. |

(ஆ) அரசாங்க நிறைவேற்றுநர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சையின் இரண்டாவது பகுதி (இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விசேட பகுதி)

(I) சாராம்சம்

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| பொது விழிப்புணர்வு | 3 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40. கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். |

**பாட விதானம்**

| *பொது விழிப்புணர்வு* |
|---|
| இலங்கையின் புவியியல், அரசியல், பொருளாதார மற்றும் கலாசார விடயங்கள் உள்ளிட்ட இலங்கை தொடர்பாக மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சமகால நிகழ்வுகள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பில் பரீட்சார்த்தியின் விழிப்புணர்வை பரீட்சிக்கும் வகையில் வினாக்கள் அமையப்பெற்றிருக்கும். |

**02. பரீட்சையின் ஊடக மொழி :**

I. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

II. பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

III. பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டுமென்பதோடு, அதன் பொருட்டு ஒரு ஊடக மொழியை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும்.

IV. பரீட்சார்த்தியொருவருக்கு தனது விண்ணப்பத்திலுள்ள பரீட்சைக்கான ஊடக மொழியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

**03. நியமிப்பதற்காக தெரிவுசெய்யப்படும் முறை :**

அனைத்து எழுத்துமூல வினாப்பத்திரங்களுக்குமான உரிய புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் தகைமைகளை உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரிகள், எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறை மற்றும் அரசாங்க நிறைவேற்றுநர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அடையாளமிட்டுள்ள சேவை விருப்பத்திற்கு அமைய நியமிப்புச் செய்வதற்காக தெரிவுசெய்யப்படுவர்.

05 - 25

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.